"உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது"

# விபுலாநந்தம்

## கவிமஞ்சரி

தொகுப்பாசிரியர் :
திரு. வி. தங்கத்துரை B. A. (Cey.)

24 - 07 - 1987



தமிழ் இலக்கிய மன்றம்

மட் / ஆனைப்பந்தி இராம கிருஷ்ண மிசன்
பெண்கள் மகா வித்தியாலயம்,
மட்டக்களப்பு.

## VIPULANANDA'S EDUCATIONAL SYSTEM.

Vipulananda was an educationist par excellence. when the thinking cap is on, Vipulananda becomes a true creator. His writings are all creations of rare excellence. His thoughts are splendid, grand and superb like those of Plato. It might be said in true candour that he borrowed a leaf from Plato, and another from Rabelais, the great French genius, the author of "Gargantua and Pantagruel."

Says Plato to the young: "My lad, you are still young, andtime as it advances will lead you to a complete reversal of many of your present convictions; you should wait for the future then, before you undertake to judge of the supreme issues; and the greatest of these, - though you count it so trivial - is that of thinking rightly about the gods, and so living well or the reverse...If you will be ruled by me, you will wait for the fullness of clear and confident judgement on these matters to come to you and inquire whether truth lies in one direction or another , seeking for guidance in all quarters.... Where the spirit is present, education will succeed; where it is absent, it can never have more than partial success."

Vipulananda thought in this wise: the child must be brought up in an atmosphere of spiritual health. Exhibit before him good life; don't moralize. Don't preach what you yourself do seldom practise. Life turns not on preachment, but on practicable practicalities.

Says Rabelais: This is how Gargantua was instructed by Ponocrates. Nothing was neglected that might strengthen his body or set a fine edge upon his wit. Good order was always observed, and the young giant was even combed, curled, trimmed and perfumed. Then after three good hours of lecture, he went into the meadows, where they played at the ball, most gallantly exercising their bodies, as formerly they had done their minds. All their play was but in liberty, for they left off when they pleased, and that was commonly when they did sweat over all their body. There was no competitive sports so far as the children at Shivananda were concerned. Then were they very well wiped and rubbed, shifted their shirts, and walking soberly went to see if dinner was ready. and having dined they followed the noble task of donning the thinking cap.

The meals were served; they ate, and thereafter were discussed 'the natural efficacy of all that was served at dinner.' Then were sung the canticles: மாசில் வீணையும் மாலை மதியமும், made in praise of the divine bounty and munificence.

Saturday was a great day. All things were done with a large heart and in a grand way ; gardening,, washing clothes, dressing vegetables, assisting in the kitchen, serving food, chanting prayers-of a universal nature-participating in debates and literary activities: dramatics etc., conducting the Home Parliament, cutting, dressing, combing hair, caring for the sick, visiting the sea beach,

continued on last page

## எமது கருத்து

ஒரு பத்திரிகை அல்லது சஞ்சிகையைச் சரியான முறையில் உருவாக்கி வெளியிடுவது என்பது, எவ்வளவு கஷ்டமான காரியம் என்பதை நாம் எமது முந்திய அனுபவங்களிலே கண்டிருக்கின்றோம். இருப்பினும்; எமது அதிபரையும், ஆசிரிய குழாத்தையும் பற்றிய மிகுந்த நம்பிக்கை எம்மை இத்துறையில் ஈடுபடச் செய்தது. ஆக்கங்களைப் பெற்றுத் தொகுத்து அச்சேற்றிய அனைத்து வேலைகளும்; திரு. வி. தங்கத்துரை ஆசிரியர் கவனித்தார். ஏனைய ஆசிரியர்கள் தமது ஒத்துழைப்பைத் தகுந்த நேரத்தில் தந்ததன் பயனாக "விபுலானந்தம்" உங்கள் கைகளிலே தவழ்கின்றது. மஞ்சரியைத் தந்துள்ளோம் மணத்தைக் கூறுங்கள்.

நன்றி

செல்வி. ரதிவாணி குமாரசாமி.
தமிழ் இலக்கிய மன்றம், கௌரவ செயலாளர்.
ஆனைப்பந்தி இ.கி.மி.பெ.ம.வி,
மட்டக்களப்பு.
24-07-1987.

மட்/ஆனைப்பந்தி இராம கிருஷ்ண மிசன் பெண்கள் மகா வித்தியாலயம்

மட்டக்களப்பு

## பாடசாலைக் கீதம்

வாழ்த்துவோம்! வாழ்த்துவோம்! வாழ்த்துவோம்!
மங்கையர்கள் இங்குகூடி மாண்புபெற்று விளங்கிடச்
செங்கமலத் தாழ் பணிந்து சேமமிங்கு பொலிந்திட—வாழ்த்துவோம்...

கன்னித் தமிழ் கற்றுமே பன்மொழிகள் கற்குநாம்
வன்பகைகள் வென்றுமே வான்புகழைத் தேடுவோம்—வாழ்த்துவோம்...

உண்மை என்றும் ஓங்கிட
ஊக்கமொடு கன்னியர்
பண்ணொலித்துப் பாவிசைப்போம்
விவேகானந்தா நிலையிலே — வாழ்த்துவோம்...

பரம கம்ச தாசரிங்கு
அன்னையொடு கூடியே
வரமருளி வாழ்த்த என்றும்
வாணியருள் நோக்குமே — வாழ்த்துவோம்...

பாதிப்பிறை சூடுவோனை
நாதியாகக் கொண்டு நாம்
கலைவளர்த்து மனைவளர்க்கும்
விவேகானந்தா வாழ்கவே! — வாழ்த்துவோம்...
வாழ்த்துவோம்... வாழ்த்துவோம்...

# யாழ் நூல் தந்தோன்

*************************
* கவிஞர் செ. சிவானந்த தேவன் *
*************************

ஈழத்திலே புகழ் வளர்த்திடும் கிழக்கினில்
இலங்கிடும் காரை நகரில் – இந்த
ஞாலத்திலே உயிர் நிலைபெற உழுதிடும்
நலமுறு உழவர் மரபில் – கார்
காலத்திலே விழும் மழையென முத்தமிழ்
கவினுறச் செய்யும் வகையில் – வளர்
சீலத்திலே உயர் விபுலானந்த ரென்னுமெம்
சுவாமிகள் வந்து பிறந்தார்!

பேரினிலே மயில் வாகனர் என்றுதம்
பெற்றோர்கள் அழைத்து மகிழ – அடி
வேரினிலே பழுப் புற்றதோர் பலாவென
விவேகத்தி லுயர்ந்து விளங்கி – எழில்
ஊரினிலே சிறந் தோங்கிய மதுரையில்
ஒளிர்தமிழ்ச் சங்க மதனில் – கல்விப்
போரினிலே எதிர் நின்றவர் வென்றுநற்
பண்டித ராகி மிளிர்ந்தார்!

சங்கத்திலே அவர் பண்டித ரானபின்
தன்மனம் மிகவும் அடக்கி – மிளிர்
வங்கத்திலே புகழ் வாய்ந்த சிவானந்த
மாமுனி அவர்கள் அருளால் – வளர்
அங்கத்திலே காவி அணிந்தவர் அன்பினால்
அகிலத்தின் சுகங்கள் துறந்து – புடத்
தங்கத்திலே ஒளிர் விபுலானந்த ரென்னுமோர்
தரமிகு பெயரை அடைந்தார்!

வாதத்திலே பெரும் வல்லவர் ஆங்கிலம்
வடமொழி கலைகள் பயின்று — இறை
போதத்திலே சிறப் புற்றதோர் ஞானியாய்ப்
பண்புறக் கல்வி புகட்டி — இந்து
வேதத்திலே உளம் தேர்ந்திட்ட உண்மையை
விருப்புடன் எமக்கு(ம்)உணர்த்தி —இசை
நாதத்திலே உயர் "யாழ்"எனும் நூலினை
நலமுறத் தந்து சிறந்தார்!

********

<u>கவிஞர். செ. சிவானந்ததேவன் அவர்கள்</u>

"தேவன் உரைத்த கவி தீந்தமிழர் நாவின்மொழி" என்று கவியரங்கொன்றிலே நன்றிக்கவி பாடிய நங்கையொருத்தி குறிப்பிட்டாள். அது இன்றும் எனது காதுகளில் ஒலித்துக்கொண்டு இருக்கிறது. சொல்நயம், பொருள்நயமுணர்ந்திவர் கவிதைகள் யாப்பதிலே வல்லவர். புன்சிரிப்பே இவருடைய சொத்து. கவியுலகுக்குக் கிடைத்த நல்முத்து. மத்திய கல்லூரியின் பழைய மாணவன். இவர் தற்போது மட்டக்களப்பு இ. போ. ச — மட்டக்களப்புச் சாலையில் எழுத்தராகக் கடமையாற்றுகின்றார். 'திரைகடல் ஓடித் திரவியம்' தேட வெளிநாடு சென்று, கண்டு வந்தவர். என்னுடைய இனிய நண்பர். பிறருக்கு உதவிசெய்யவேண்டும் என்ற மனப்பான்மை கொண்டவர்... வாழ்க பல்லாண்டு.

— தொகுப்பாசிரியர் —

********

"<u>முயற்சிகள் தொடர எனது இனிய வாழ்த்துக்கள்</u>"

சுவாமி விபுலானந்தரால் உருவாக்கப்பட்ட இப்பாடசாலை அவரை நினைவுகூர்வதிலே பெருமை அடைகிறது.

இச்சமயத்தில் 'விபுலானந்தம்' என்னும் இக்கவிதை நூல் வெளியிடப்படுவது பொருத்தமானதே. இவ்வகை முயற்சிகளால் மாணவர் பயனடையின் அதுவே வெற்றியாகும். பாடப்புறக் கிருத்தியங்கள் மாணவருக்கும் அதன் வழியாகச் சமூகத்துக்கும் பயன் தரவேண்டும். இவ்விடயத்தில் பாடுபட்டுழைத்துச் சிறப்புச் சேர்த்த எமது ஆசிரியர் குழுவுக்கு எனது பாராட்டுக்கள். முயற்சிகள் தொடரட்டும்.. வாழ்க.

— வி. த. குமாரசாமி பீ. ஏ.
அதிபர்/போஷகர்

# பூசைக்கு விரைவோம்

* * * * * * * * * * * * * * * * * * * * * * * * *
* புலவர்திலகம். மு. சோமசுந்தரம்பிள்ளை *
* * * * * * * * * * * * * * * * * * * * * * * * *

பத்தினித் தெய்வமாம் பதிகண்டு பரவிடும்
பழமைசேர் காரை தீவில்
பண்புக்கு வித்தான வன்சாமித் தம்பிக்குப்
பாலனாய் வந்துதித் தோன்
வித்தைக்கு முதல்நல்ல ரெத்தினம் பத்திலே
விளைவு குஞ்சித் தம்பியாம்
மேற்குமொழி மைக்கலில் விளக்குவொணல் சாமியே
மெச்சுமா ணவனு மானான்
முத்தமிழ் தனக்குவைத் தியலிங்க தேசிகன்
முத்தறிஞர் சேர்க்கை யாலே
முற்றறிவு, சீராமக் கிருஷ்ணசங் கப்பணியில்
மூழ்கிமெய்த் துறவு பூண்டோன்
சித்திரச் சிலம்பு யாழ்ச் சிற்பி விபுலானந்தன்
செந்தமிழ்த் தேனு மிர்தம்
சேவைபொன் மட்டக் களப்புக்கு வாய்த்தசிந்
தாமணியை நினைவு கூர்வாம்!

பண்டையப் பாணர் மீட்டுப்
பாடிய மதுர யாழ்கள்
இன்றையத் தமிழ்ப்பொன் னூட்டில்
இலைஎனும் வசையைப் போக்கத்
தண்டமிழ்ச் சிலம்பை ஆய்ந்து
தத்துவ மெய்ஞ்ஞா னத்தால்
கண்டுடன் படைத்து மீட்டுக்
கனிச்சுவை விருந் தளித்தோன்!

சேரிப் புறத்து மக்கட்குச்
சேவை செழித்த சீராளன்
ஆரி யத்தில் ஆங்கிலத்தில்
அழகு தமிழில் வல்லோனும்
ஊர்கள் தோறும் அனாதைகளை
உயர்த்தும் ஆக்கக் கல்வியினால்
சீரிராமக் கிருஷ்ண சங்கப்
பள்ளிக் கூடம் பலபடைத்தோன்!

அமர கவிபா ரதிபடைத்த
அமுதக் கவிதைச் சுவைவிருந்தை
நமது நாட்டுத் தமிழ்மக்கள்
நாவில் இனிக்க விழிப்பூட்டிச்
சமைக்குங் குடிலில் பெண்ணினத்தைத்
தள்ளா தறிவுக் கண்திறக்கும்
அமைப்பாம் விபுலா னந்தர்பணி
ஆக்கம் ஆனைப் பந்தியைப்பார்!

நானென தெனும் செருக்கை
நாட்டிலே மூட்டுந் தீக்கோர்
வான்மழை பொழிந்த தென்ன
வள்ளலாம் இராமக் கிருஷ்ணத்
தேனருள் உபதே சத்தீந்
தமிழ்க்கவி சொரிந் தளிக்கும்
ஞானியாம் விபுலா னந்த
நாவலன் நாமம் வாழ்க!

கட்டுரை கவிதை பூத்த
கற்பகச் சோலை என்கோ!
மட்டுமா மடந்தை சைவ
மரபுக்கோர் ஆடி என்கோ!

பட்டத்தைப் பயில்மா ணவர்க்கோர்
பல்க லைக் கழக மென்கோ!'
பொட்டிட்டு விபுலா னந்தப்
பூசைக்கு விரைவோம் வாரீர்!

***********

## புலவர்திலகம். மு. சோமசுந்தரம்பிள்ளை அவர்கள்

புலவர்திலகம். மு. சோமசுந்தரம்பிள்ளை அவர்களை "மண்டூர்க்கவிஞர்" என்றே பொதுவாக அழைப்பர். அவர் மண்டூர்க்கவிஞரல்ல. இந்த மண்டலத்தின் கவிஞர் என்றேநாம் கருதுகின்றோம். இவர் புலவர் மணியின் மைத்துனர். விருத்தப் பாவில் வல்லுநர். புலவர்மணிக்கு வெண்பா என்றால் இவருக்கு விருத்தப்பா. மண்டூரில் இவரது வீட்டைத் தேடிச் செல்பவர்கள் 'புலவர்வீடு' எது? என்று கேட்டால்தான் ஊரவர்கள் வீட்டைக் காட்டுவார்கள். ஏனெனில் மண்டூரில் இவரைப் புலவர் என்றே கருதுவர்... பேசிக்கொள்வர். வேறுபெயர் இவர் மண்டூரில் கொள்ளமுடியாது. இவர் ஓர் இயற்கைப் புலவர். மண்டூர்ப்பதிகம் முதல் பலகோயில்களைப் பற்றிப் பாடல்கள் தந்துள்ளார். இவைப்பாறிய ஆசிரியரான கவிஞவர்களை இளைப்பாறியவர் யாரும் கூறிவிடமாட்டார்கள். ஏனெனில், அவர் இன்னும் மிக இளமையாகக் காட்சியளிக்கின்றார். கலைமகளின் கடாட்சம்பெற்ற அவர் இளமையோடிருப்பது ஒன்றும் ஆச்சரியப்படத்தக்க விடயமல்ல. புலவர் அவர்கள் இன்னும் பல்லாண்டுகாலம் வாழ்ந்து தமிழ்ப்பணி செய்யவேண்டுமென்று 'விபுலானந்தம்' அவரை வாழ்த்துகின்றது.

— தொகுப்பாசிரியர் —

***********

## "செய்வன திருந்தச் செய்"

நன்றேசெய், அதை இன்றேசெய் என்றான் ஓரறிஞன். நல்லவற்றைச் செய்ய நாள், நட்சத்திரம் பார்த்துக் கொண்டிருந்தோமானால் எமது சமூகத்துக்கு நாம் துரோகமிழைத்தவர்கள் ஆவோம். எது எப்போது தேவையென்று உணர்ந்து ஆலைப்பந்தி மகளிர் பாடசாலையினர் செய்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களின் முயற்சி மலர்ந்து மணம்வீச என் இதயங் கனிந்த வாழ்த்துக்கள்.

—கே. பரிமளராஜா
உப தபாலதிபர்

## "அறிவாற்றல் மடைதிறந்து பாயவேண்டும்"

மட்டக்களப்பு ஆனைப்பந்தி இராம கிருஷ்ண மிசன் பெண்கள் மகா வித்தியாலயத்திலிருந்து ஊற்றெடுக்கும் "விபுலானந்தத்திற்கு" இவ்வாழ்த்துச் செய்தியினை அனுப்பி வைப்பதில் மிக்க ஆனந்தம் அடைகின்றேன். வித்தகர் விபுலானந்தரது அரவணைப்பில் உருவாகிய இவ்வித்தியாலயத்தின் தாபகர் தினத்தையொட்டி "கவிதை மலராக" இம்மலர் மலர்வது மிகுந்த பொருத்தமுடையதாகும். பிஞ்சு வயதினில், மாணவர்களில் இயல்பாகப் பொதிந்து கிடக்கும் திறன்களை வெளிக்கொணரும் ஆக்கப் பணியிலும் "விபுலானந்தம்" ஈடுபட்டு வெற்றிபெறவேண்டும் என்பதும் எமது பேரவாவாகும். இந்த நன்முயற்சிக்கு பொறுப்பானவர்களை நாம் பாராட்டுகின்றோம். இதுபோன்ற முயற்சிகள் இடையீடின்றி மேற்கொள்ளப்படல் வேண்டும் என அவாவுகின்றேன்.

தமிழ் மணமும், கவி மணமும் சேர்ந்து மாணவியர்தம் அறிவாற்றலை மடைதிறந்து பாயவைக்க "விபுலானந்தம்" வழி வகுக்கவேண்டும் என வாழ்த்துகிறேன்

— க. தியாகராசா
பிரதம கல்வி அதிகாரி.

மாவட்டக் கல்வித் திணைக்களம்,
மட்டக்களப்பு
1987 – 07 – 06

*****************

## வாழ்த்தி வழுத்துதுமே!

"ஓங்கு புகழ் கொண்ட முனி
உயர் யாழ் நூல் வல்லோன்
மாண்பு மிகு மட்டுநகர் தவப்புதல்வ
சீரோங்கு செந்தமிழின் நலன் விளங்க
செழிப்பான சேவை பல செய்த முன்னோன்
பாங்குடனே செய்த பல தமிழ்ப்பணிகள்
ஈங்கு எடுத்தியம்ப வென்று
விபுலானந்த மெனும் நாமங் கொண்ட
பாங்கான கவிதை நூல் சிறக்க
பண்பாளர் பல ஆக்கம் படைத்தளித்து
நன்றான வாய்ப்பதனைச் சேர்த்தளித்த
ஸ்தாபகர் தினக் குழுவினர் தம்
நற்பணிகள் சிறந் தோங்க
வாழ்த்தி வழுத்துதுமே!"

— செ. எதிர்மன்னசிங்கம்
கலாசார உத்தியோகத்தர்

கச்சேரி,
மட்டக்களப்பு.
7.7.1987

# பாரதியப் பாரதியை.!

கவிமணி திமிலைத்துமிலன்

இலகுசொற்கள் இலகுநடை இலகுசந்தம் கொண்டதாய்
இலகுவான தமிழ்குழைத்துக் கவிதைசெய்தான் பாரதி
'பழகுசொற்கள் கொண்டவெல்லாம் இலக்கியங்க ளாகுமா?
புலவனில்லை'யென்றவனைப் புறக்கணித்தார் புலவர்கள்.

புலவர்போற்றத் தவறிவிட்ட புதுமைபோற்றும் கவிஞனை
நிலமுழுக்க அறியவைக்க நிமிர்ந்தெழுந்தான் ஒருவனே
கலகமிக்க புலவர்முன்பு கவிநயங்கள் காட்டினன்
வெலவெலத்த புலவர் 'என்ன விந்தை'யென்று ஒதுங்கினர்.

கற்றறிந்தோர் தலைக்கனத்தைக் கவிதைவெள்ளம் பார்க்குமா?
பிய்த்தெறிந்து பாய்ந்துசெல்லும் பெருமைமிக்க கவிதைகள்
இத்தலத்துக் கின்றுதேவை இதைஉணர்ந்த பாரதி
முத்தும்பொன்னும் மணியும்கொட்டி முளைவித்தான் அறிவிரோ?

மரபுவழி தவறிவிட்ட மடயன் என்று தூற்றினீர்
மரபுவழி சிந்துகண்ணி வந்ததில்லை யென்பிரோ?
மரபுஒன்றைப் புதியதாக மலரவைத்த பாரதி
'மரபுகாக்கும் கவிதைமன்னன் வாழ்க' என்று முழங்கினன்.

மக்களுக்கு விளங்கிடாத மரபுகாக்கும் இலக்கியம்
தக்கதென்று முரசறைந்து சாடுகின்ற புலவர்காள்!
மக்களில்லை யென்னிலுங்கள் வாழ்க்கையென்ன ஆவது?
மக்கள்சக்தி யுணர்ந்துவீரர் வழியிற்செல்ல வாருங்கள்.

'பாமரர்க்கு ஏற்றதந்தப் பாடலென்று சாடுவீர்
பாஅமரர் ஆக்குமந்தப் பாடலென்ப தமிழ்வா
பாமரர்தம் சக்தியே பாரின்சக்தி என்பதை
பாமரர்க்கு உணர்த்தவந்த பாரதியைப் போற்றுமின்!

என்றிவ்வாறு படித்தவர்க்கு இடித்துரைத்த பண்டிதன்
இன்றில்லாது போனபோதும் எழுதிவைத்த உண்மைகள்
கண்டுஏற்றிப் போற்றல்எங்கள் கடமையென்ப துணருவோம்
நன்றியோடு அவனைவாழ்த்தி நாமுமக்க ளாகுவோம்.

பாரதியைப் பாரறியப் பண்ணிவைத்த பண்டிதன்
யாருமில்லை எங்களுக்கு யாழ்நூல்தந்த முனிவனே
போரினோடு மாரடித்துப் புலம்புமிந்தப் போதிலும்
வீரராக மடியஅந்த வித்தகன்தாழ் பணியுவோம்.

* * * * * * * * * * * * * * * * *

<u>கவிமணி திமிலைத்துமிலன் அவர்கள்</u>

கவிமணி திமிலைத்துமிலன் அவர்களை அறியாத தமிழர் ஈழவள நாட்டில் எவரும் இல்லையெனலாம். ஏனெனில் அவருடைய கவிதைகள் அவ்வளவு பிரசித்தி பெற்றவை. ஈழத்தில் மாத்திரமல்ல இந்தியாவிலும் கவிமணி அவர்களின் கவிதைகள் வெற்றிக்கொடி நாட்டிப் பரிசுகள் பல பெற்றுள்ளன. அன்னாரது பல ஆக்கங்களை இந்தியச் சஞ்சிகைகளிலும் காணக்கூடிய சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது.

கொய்யாக் கனிகள், நீரரமகளிர், நெஞ்சம் மலராதோ, அழகு முல்லை ஆகிய நூல்களை அவர் வெளியிட்டுள்ளார். மட்டக்களப்பு கலாசாரப் பேரவை 'கவிமணி' என்னும் பட்டத்தை அவருக்கு வழங்கிப் பெருமை தேடிக்கொண்டது.

மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலையில் விரிவுரையாளராக இருக்கும் கவிமணி அவர்கள் ஒரு கலைக்குடும்பத்தைச் சேர்ந்தவர். இவரது சகோதரர்கள் புகழ்பூத்த கவிஞர்களாகவும், எழுத்தாளர்களாகவும் இருக்கின்றார்கள். கவிமணி அவர்கள் எழுதிக் குவித்த எத்தனையோ கையெழுத்துப் பிரதிகள் இன்னும் அவர் கைவசம் இருக்கின்றன. அவை நிச்சயம் வெளிக்கொண்டுவரப்பட வேண்டும். இவ்வளவு சிறப்புக்களுக்கும் பாத்திரமான கவிமணி அவர்கள் இன்னும் நீண்டகாலம் வாழ்ந்து தமிழுக்கும் இனத்துக்கும் சேவை புரியவேண்டுமென்பதே விபுலானந்தத்தின் அவா.

— தொகுப்பாசிரியர்.

# இதய மலர் வேண்டும்

கவிஞர் ஜீவா ஜீவரத்தினம்

அறுபத்து நான்கு கலைமுற்று மோதி
அகிலத்தில் அறிஞ ராகி
குறைவற்ற செல்வ நிலைபெற்று, வாழ்வு
கொடிகட்டி ஏறி னாலும்
இறைபத்தி உன்றன் இதயத்தி லில்லை
எனில், உற்ற புகழி னாலே
குறிவைத்த பேறு உனைநத்து மென்று
கொளல், சுத்த மடைமை தோழா!

பலநூறு தான தருமங்கள், தெய்வ
பணி, அன்ன சத்தி ரங்கள்,
கலையால யங்கள், சலமுறு கூவல்
கடவுளின் பேரி னாலே
உலகோர்கள் மெச்ச ஒழியாது செய்தும்,
உனதாழ நெஞ்சை, அந்த
மலரோனி டத்தில் அளியாது போயின்
வருபேறு யாது முளதோ?

மழைமாரி போல மலர்மாரி பெய்து
வழிபாடு செய்வ தாலே
நிலையான பேறு பெறலாகு மென்ற
நினைவுள்ள பேதை நெஞ்சை
அழகான வாச மலராக, ஈசன்
அடிமீது சொரிவ தாலே
உளமார ஈசன் உறைவானுன் நெஞ்சில்
உணர்வாய், என் இனிய தோழா.'

## கவிஞர், ஜீவாஜீவரத்தினம் அவர்கள்

"இறைவன் தாள்பணிய இதயமலர் வேண்டும்" என்று சுவாமிஜீ விபுலானந்தர் நான்கு கவிதைகளில் கூறிய அதே விடயத்தை கவிஞர் ஜீவாஜீவரத்தினம் ஒரேயொரு கவிதையில் மிக அழகாக ஆழமாக எடுத்துக்கூறிவிட்டார். ஆம்! அதுவே அவரது கவிதைகளின் பண்பு. மிகப்பெரிய விடயங்களை மிகத்தெளிவாக, மிகச்சுருக்மாகக் கூறுவதே அவரது வெற்றி. துறைநீலாவணை பெருங்கலைஞர்களைக் கொண்டநாடு. அந்த வழியிலே இவரும் ஒருவராகவிருந்து வெற்றிநடை போடுகிறார். ஆசிரியரான இக்கவிஞரின் ஆக்கங்கள் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் பெருமளவில் வெளிவந்திருக்கின்றன. இக்கவிஞரின் பணி தொடர எமது வாழ்த்துக்கள்.

— தொகுப்பாசிரியர்.

************

## முகாவித்துவான், உயர்திரு எவ். எக்ஸ். சீ. நடராசா பேசுகிறார்...

அன்றொருநாள், விபுலானந்தம் வெளியீட்டுக்காக இங்குவந்தபோது, இது அச்சுப்பிரதியாக வெளிவரும் நாள் வெகுதூரத்திலில்லை என்று கூறிவைத்தேன். அன்று தட்டச்சுப் பிரதி, இன்று கல்லச்சுப் பிரதி, இந் நாளை அச்சுப் பிரதி. கருவாக இருந்தது, உருவாகி வருகிறது, நாளை இது அச்சுப் பிரதியாக உருவாகும் என்பதில் எதுவித ஐயப்பாடும் எனக்கில்லை.

ஆனைப்பந்தி, மகளிர் கல்லூரி சுவாமி விபுலானந்தரால் ஆரம்பிக்கப்பட்டதொரு பாடசாலை. அன்றிருந்த வளம் இன்றில்லையாயினும், சில காலங்களுக்கு முன்பிருந்ததைவிட மிக வேகமான வளர்ச்சியை இப்பாடசாலையிலே காணக்கூடியதாக இருக்கின்றது. நாம் வாழுகின்ற காலத்திலேயே நம்மை நினைவுகூரத்தக்க வகையில் பல நல்ல காரியங்களை நாம் செய்துவிட்டுச் செல்லவேண்டும். இப்படியான நல்ல காரியங்களிலிருந்து மாணவர்க்கும், மற்றவர்க்கும் மனதிலே எழுச்சி தோன்றி, செயலூக்கத்தை ஏற்படுத்தும். எண்ணங்கள் செயலாக மலரும்போதுதான் நாட்டுக்கும், வீட்டுக்கும் நன்மை கிடைக்கும்.

இப்பாடசாலையின் இலக்கிய மன்றம் ஏற்கெனவே தட்டச்சுப் பிரதியாக வெளிக்கொண்டு வந்த 'விபுலானந்தம்' மட்/சர்வோதய இயக்கம் நடாத்திய புத்தகக் கண்காட்சியில் விசேட பரிசொன்றைப் பெற்றிருக்கிறது. அதற்காக உழைத்த அதிபரையும் ஆசிரியர் குழாத்தையும், மாணவரையும் மனம் திறந்து பாராட்டுகிறேன். செய்யுங்கள், ஏதாவது செய்யுங்கள், நன்மையான காரியங்கள் ஏதாவதைச் செய்யுங்கள்.. தற்சமயம் நமது பகுதிகளுக்குத் தேவையான எக்காரியங்களையும் செய்து, அவற்றை முன்னேற்ற வேண்டியது எமது தலையாய கடமை. "விபுலானந்தம்' சிறக்கவும் அது தொடர்பான விழா நன்கு நடைபெறவும் என்னுடைய நல்லாசிகள் உரித்தாகட்டும்.

எவ். எக்ஸ். சீ. நடராசா

மத்திய வீதி,
மட்டக்களப்பு
15.7.87

# வாராய்...நீ...வாராய்...!

கமலினி முத்துலிங்கம்

காரை நகர்தந்த தமிழ்ப் புத்தகமே
காலமெலாம் உன்புக ழோர்சித்திரமே
பாரினிலே தமிழ்வளர்த்த வித்தகனே
பார்த்திடுவாய் தமிழ்ச் சங்கநிலையினையே
போர்த்திருக்கும் இருள் விலக்க ஒளியாக
பூத்திடுவாய் புவிமீது மலராக
சோர்ந்திருக்கும் கலைஞர்களின் துயில்போக்க
வாராயோ முத்தமிழின் உத்தமனே!

தமிழுக்கு உயிரூட்ட வந்தவனே
தரணியிலே புகழ்நிறுத்திச் சென்றவனே,
யாழ்நூலை எமக்கென்ற தந்தவனே
யார்மறப்பார் நாமம் விபுலானந்தனே,
இயல் இசைநாடகம் மூன்றையுமே
இருக்கும்வரை எமக்களித்த இன்னமுதே
செயல்பலவும் தமிழுக்காய்ச் செய்தவனே
சென்றஇடம் மீண்டு...நீவருவாயோ?

நள்ளிரவு வேளையிலே நீயுஞ்சென்று
துள்ளுமின மீனிசையைக் கேட்டீரே;
அள்ளும் நிலவொளியினிலே அமைதியோடு
அகிலமே அதிசயிக்கும் விந்தைகண்டீர்
சொல்லோடு இப்பெயரோ அழியாதிருக்க
சரித்திரம் நீபடைத்தாய் உலகேவியக்க
சந்தனமாய் இம்மண்ணில் மணம்நீவீச
வந்திடாயோ விரைவாக ஒருநாளில்.

இல்லறத்தில் இன்பமென உலகேசொல்ல
இல்வாழ்வை நீதுறந்து இன்பங்கண்டு
பொருளற்ற வாழ்வினிலே ஏதுஇன்பம்
போதனையை எமக்கன்று உணர்த்திவிட்டாய்
அருள் சிந்தும்ஸ்ரீராமக் கிருஷ்ணர்வழி
ஆசையுடன் நீபற்றிச் சென்றவேளை
அவருக்கு துணையாக வாழ்ந்துவிட்டாய்
அவரோடு துறவறத்தில் உறுதிபெற்றாய்.

பலமொழியின் இலக்கியத்தைப் பயின்றுவந்து
பருகியதில் சிறந்ததைநீ மொழிபெயர்த்தாய்
அரியபல பொக்கிஷங்கள் அயல்மொழியில்
அமிழ்ந்தின்று கிடக்கிறது அறிவீரோஐயா!
தொடர்ந்துமுன் பணிதொடர ஒருவரின்றித்
துன்பப்பால் குடிக்கின்றோம் தினமேயிங்கு
விரைவாக நீபிறந்து மொழிபெயர்த்து
விருந்தாக அளிப்பாயோ விபுலானந்தா!

***************

செல்வி. கமலினி முத்துலிங்கம் அவர்கள்

சில காலத்துக்கு முன் இலங்கை வானொலியில் ஒரு பெண்ணின் பெயர், ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியின்போது கூறப்பட்டு வந்தது. யார் அந்தப் பெண் என்னும் கேள்வி மனத்திலே எழுகிறது. 'அவர் மட்டுநகரைச் சேர்ந்தவர்' என்பது மட்டுமே விடையாகிறது. ஈழத்துப் பாடல் நிகழ்ச்சியிலேயே முதன்முதலில் கவிஞர் கமலினி முத்துலிங்கத்தை அறிந்துகொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. தீரவிசாரித்தபோதுதான் செல்வி கமலினி முத்துலிங்கம் என்றால் நன்கு அறியப்பட்ட ஆரம்பப் பாடசாலை ஒன்றின் அதிபரின் மகள் என்பது தெரிய வந்தது. இன்னும் அவர் தத்துவப் பாடல்களைத் தந்து கொண்டிருக்கின்றார்.

அரங்கு பல கண்ட இவரின் கவிதைகளில் தத்துவக் கருத்துக்கள் செறிந்திருப்பது குறிப்பிடப்படவேண்டியதொன்று. இலைமறைகாய்போன்றிருக்கும் இவர்போன்ற எத்தனையோ பேர் இன்னும் இருக்கின்றார்கள். அவர்பணி தொடரட்டும்... வாழ்க.

— தொகுப்பாசிரியர்.

# வழி நடப்பார் யார்?

கவிஞர். செ. குணரெத்தினம்

"மட்டக்களப்பாரின் மண்டைக்குள் ஒன்றுமில்லை
மந்தைகள்போல் மாற்றாரின் வழிதேடிப்போவார்!
கெட்டித்தனமில்லை!" என்றெல்லாம் சொல்பவர்கள்
கிழக்கின் ஒளியாகக் கீர்த்தியுடன் நம்மண்ணும்
மட்டக்களப்பூரில் மலர்ந்த விபுலானந்தன்,
மாணிக்கப் பெட்டகமாய்ச்சிறந்து வளர்ந்தமகான்
எட்டுத் திசைகளிலும் எம்நாட்டுப் பெருமைதனை
எடுத்தோதிச் சென்றவனை ஏன்மறந்து போனார்கள்!

புலவனென்று சொல்வோமா! புடம்போட்ட தங்கமென
புத்தகங்கள் ஆக்கிவைத்த நூலாசான் என்போமா!
கலைஞனென்று சொல்வோமா! துப்பாக்கி கையேந்தி
காவல்புரிந்தவனைக் காவலன்தான் என்போமா!
அலைகடலைத் தாண்டிப்போய் அமிழ்தினிய தமிழ்வளர்த்த
அறிவாழி என்போமா! ஆய்ந்து இசைவளர
விலைமதிப்பேயில்லாத யாழ்நூலைச் செய்ததனால்
வித்தகனை, இசைமேதை விற்பன்னன் என்போமா!

பத்திரிகை ஆசானும்! பழுத்தபெரும் அறிவுடைய
பட்டதாரி பண்டிதனும்! பாடும்மீன் இசையறிந்த
முத்தமிழ் வித்தகனும்! முழுமைபெற்ற
முனிவனும்! மட்டூரின் மூச்சுப்பேச்சு
சொத்தெல்லாம் இவன்தானே! சொரணையற்ற
சுந்தரம்சேர் தேனாட்டில் வாழும்மக்காள்
இத்தரையில் இவன்போல எவனுமில்லை
இனியாச்சும் இவன்வழியில் நடப்பார்யாரோ!

எடுத்ததெற்கெல்லாம்நாம் இவன்நாமம் சொல்லித்தான்
எம்மார்பு தட்டுகிறோம்! இவனின்பின்னால்
அடுத்தவனும் நம்மண்ணில் நடந்தாலென்ன?
அன்றுதொட்டு இன்றுவரை அந்தநாள் பெருமைகளை
எடுத்தியம்பி வாழ்வதில்தான் எம்மவர்க்கு உசார்அதிகம்!
எங்கள்மொழி, எம்நாடு எம்மாலே சிறப்படைய
மடமைதனை விட்டொதுக்கி மாமுனிவன் போல்நாமும்
முயன்றுபணி செய்தென்றும் முன்னேறி வாழ்வோமா!

*****

<u>கவிஞர். செ. குணரெத்தினம் அவர்கள்</u>

கவிஞர். செ. குணரெத்தினம் அவர்கள் மட்டக்களப்பு அமிர்தகழியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். நாடறிந்த கவிஞர். அத்துடன் பிரபல எழுத்தாளர். கவிதையிலேயே தன்னுடைய எழுத்துலக வாழ்க்கையை ஆரம்பித்த இவர், இன்று எழுத்தின் பல்வேறு வடிவங்களையும் தன்னுடைய எழுத்துப் பசிக்கு இரையாக்கிக் கொண்டவர். கவிதை, சிறுகதை, நாவல், குறுங்கதை, நகைச்சுவை போன்றவற்றுடன் பிரதேசப் பாரம்பரியங்கள், தொழில்முறை அம்சங்கள் முதலியவற்றையும் எழுத்துருவில் கொண்டு வந்துள்ளார். பத்திரிகைகளை புரட்டுகின்ற சந்தர்ப்பங்களில் இவ்வெழுத்தாளரின் படைப்புக்களில் ஏதோவொன்று வெளிவந்திருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

கிழக்கிலங்கையிலிருந்து 'உதயம்' என்னும் காலாண்டுச் சஞ்சிகை ஒன்று உதயமாகவுள்ளது. அதில் வருடத்துக்கு மூன்று நாவல்கள் வெளியாக உள்ளன. முதல் நாவலாக கவிஞர் அவர்களின் "தெய்வ தரிசனம்" என்னும் நாவல் மிகவிரைவில் வெளியிடப்படவுள்ளது. மேற்படி முயற்சிக்கு ஆண்டவன் அருளுடன் வாசகப் பெருமக்களின் ஒத்துழைப்பும் அவசியம் தேவைப்படுகிறது. அதை எமது பகுதி வாசகப் பெருமக்கள் நல்குவார்கள் என்பது திண்ணம்.

பழகுவதற்கு இனியவரான இவர், படாடோபமற்றவர். எளிமையானவர். இவரைக் கவியரங்கொன்றிலே 1972ம் ஆண்டு சந்திக்கும் வாய்ப்பு எனக்கேற்பட்டது. அன்றிலிருந்து எம்மிடையே நெருங்கிய தொடர்பு ஏற்பட்டு இன்றுவரை தொடர்ந்து வருகிறது.

எமது பாடசாலையில் நடாத்தப்பட்ட பல விழாக்களில் பங்குபற்றிச் சிறப்பித்த இவர், முந்திய இதழுக்கும் கவிதையொன்றினை யாத்தளித்தார். எளிய தமிழ்நடையில் அமையும் இவருடைய ஆக்கங்கள் நிச்சயம் தொகுக்கப்படவேண்டியவை. படைப்பாளியான செ. குணரெத்தினம் அவர்கள் இன்னும் பல்லாண்டு காலம் வாழ்ந்து பணி செய்யவேண்டுமென்பதே எமது அவா.

— தொகுப்பாசிரியர்.

# உயிர் பெற வேண்டும்

திமிலை ஸ்ரீதரன்

கலங் கரையின் விளக்க மென
காரை நகர் கடைந் தெடுத்த
இளங் கவிதை இசைப் புலவன்
இளங் கீரன் அவன் சீரும்
பழம் பொருளும் பசும் பொன்னைப்
பார் புகழ்ந்த பரி சிறைக்கக்
களம் புகுந்து கடல் கடந்து
கருத் தெறிந்து நின்றதுவே!

இசைக் குயிலன் இன் முகத்தன்
இய லிசையின் இறைவ னவன்
நசை துடிக்கத் தமிழ் மொழியில்
தான் தோன்றிக் கதை விளக்கும்
இசைச் சுரத்தின் எங்க மு
ஏழ் எழுத்தின் ஒலிக் குறிப்பால்
திசை. எட்டும் புகழ் எட்டும்
திலகத்தின் திறன் முட்டும்.

வீட்டைக் காத்திடும் வீர மறவர்நாம்
வீணர் களாய் இல்லையெனத் தாய்
நாட்டைக் காத்திடத் தரணி போற்றிடத்
தானும் படை யதனிற் சேர்ந்தே
செய்த சேவை பல கண்டு ஊனத்
தேடும் உளம் இன்றும் உண்டு;
வைத வரை வாழ்த்தும் நற்பண்பால்
வையகம் வாழ்த்துதே அன்பால்.

உத்தமர் மறைந்தாலும் உலகம் மறக்கவில்லை
ஊனுடம்பு இங்கில்லை என் என்றால்
செத்தார் வரமாட்டார் செகந் தனிலே
செய்தார் இங்கு சிலைகள் பல,
சொத்துக்கள் அவருக்குக் கொஞ்ச நஞ்சமல்ல
சோறு கொடுத்தே உபசரிக்கும் நாட்டினிலே
வித்துக்கள் விளைவதுபோல் வீட்டிற் கொரு
விபுலானந்தன் வரவேண்டும் உயிர்பெற்று.

************

## கலைஞர் திமிலைஸ்ரீதரன் அவர்கள்

கவிமணி திமிலைத்துமிலன், திமிலை மகாலிங்கம், திமிலைக் கண்ணன் வரிசையில்... இதோ ஓர் இளஞ்சிங்கம். அவர்தான் கலைஞர் திமிலைஸ்ரீதரன். இளம் ஆசிரியன். பண்பு மிக்கவர். பழகுவதற்கு இனியவர். பேச்சு மேடைகளில் உரை வீச்சுக்களை வீசுபவர். எளிய நடையிலே யாவருக்கும் விளங்கத்தக்க வகையில் சிறப்பாக இவர் உரையாற்றுவார். இவரது பேச்சைப் பல தடவைகள் நான் கேட்டு வியப்பெய்தியதுண்டு. இவருக்கு ஓர் எதிர்காலமிங்கு இதோ காத்துக் கிடக்கிறது. சந்தர்ப்பங்களை இவர் தகுந்த முறையிலே பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்று விபுலானந்தத்தின் சார்பில் அவரை வாழ்த்துகிறேன்.. வாழ்க.. வளர்க.

— தொகுப்பாசிரியர்.

**********

## சுவாமி ஜீவனானந்த மகராஜ் வாழ்த்துகிறார்

மட்டக்களப்பு, ஆனைப்பந்தி இராம கிருஷ்ண மிசன் பெண்கள் மகா வித்தியாலயம் சுவாமி விபுலானந்தர் நினைவு தினத்தையொட்டி மேற்படி வித்தியாலயத்தில் ஏற்பாடு செய்துள்ள விழாக் கொண்டாட்டங்களோடு அடிகளாரைப் பற்றியதாக அமைந்துள்ள "விபுலானந்தம்" எனும் கவிதை நூல் ஒன்றையும் வெளியிட முயற்சிகள் மேற்கொண்டுவருவதை அறிந்து மகிழ்ச்சியடைகின்றோம்.

சுவாமி விபுலானந்த அடிகளார் தமிழன்னைக்கும், இந்துமதத்துக்கும் செய்த பணிகளை நினைவுகூருமுகமாக அன்னாரது அயரா முயற்சியினால் எழுந்த கல்விக் கூடங்களிலும் அடிகளாரின் மேற்பார்வையின்கீழ் இருந்துவந்த நிறுவனங்களிலும், அவரது பெயரைத் தாங்கியுள்ள நிலையங்களிலும் ஸ்தாபகர் தின விழா கொண்டாடப்படுவது யாவரும் அறிந்ததே. இருப்பினும் இன்றைய காலத்தின் கோலத்தால் தத்தம் அன்றாட வேலைகளையே கவனிக்க முடியாதநிலையில் நமது சமுதாயம் அல்லலுறும் இவ்வேளையில் மக்களின் எழுச்சிக்காக, சமுதாய வளர்ச்சிக்காக, சமுதாய வளர்ச்சிக்காக....
(தொடர்ச்சி 18ஆம் பக்கம்)

# அவன் பெயர் வாழும்

கவிஞர் சோமலிங்கம்

தென்னகத்தில் ஒரு முனிவன் பிறந்தான் அன்று
சிலம்பு என்ற முத்தமிழ் நூலைத் தந்தான்
அன்னவன் ஆக்கியதை ஆரமாக விரும்பி
அன்னை என் தமிழ் எடுத்து அணிந்துகொண்டாள்
முன்னவரின் இயலிசையை நாட்கத்தை
முழுமையாக அதிற் கண்டோம் பெருமைகொண்டோம்
என்னவரின் இசைக் கருவி யாழ்தான் இங்கு
இல்லாமல் மறைந்த தனால் அன்னை நொந்தாள்!

தந்தையாம் பரம சிவன் தன்னிடத்தில்
தமிழ் அணங்கு முறையிட்டாள் உளம் வெதும்பி
"எந்தையே எனக்கு அதை மீண்டும் செய்து
என் உள்ளம் குளிரவைக்க ஒருவன் தன்னை
தந்துதவு" என்றதுமே "தயக்கம் வேண்டாம்
தலைமகளே உன்குறையைத் தீர்ப்பேன்" என்றார்
செந்தமிழாள் பொதிகைக்கு வந்து சேர்ந்தாள்
சிவன் முருகன் மயில்தனையே அனுப்பிவைத்தான்!

கண்ணகியை வழிபட்ட குடும்பம் தன்னில்
காரேறு மூதூரில் மயில் பிறந்து
மண்மீது மறைந்த யாழ்தன்னை ஆக்க
மயில்வாகனன் என்ற பெயரைப் பூண்டான்
தென்னாடும் வடநாடும் அளந்த சீரோன்
செந்தமிழை என்றைக்கும் வாழ வைத்தோன்
அன்னவனே வித்தகன் விபுலானந்தன்
அவன் செய்த ஆக்கமே யாழ்நூலாகும்!

காவித னை அணிந்தாலும் காடு ாடான்
காய்கனியை உண்டாலும் காயம் வாடான்
பாவி என்று எவரையுமே ஒதுக்க மாட்டான்
பட்டினியை மடமைதனை ஓட்டுதற்குக்
கோவில்களைப் பள்ளியாய் மாற்றம் செய்தான்
குருடராய் இருந்தவர்க்கு விழி அளித்தான்
சாவில்லை அவனுக்கு மண்ணில் எங்கள்
தமிழ்வாழு மட்டும் அவன் பெயரும் வாழும்!

***********

## கவிஞர். மா. சோமலிங்கம் அவர்கள்

'கவிதை ஒன்று வேண்டும்' என்றால் 'இதோ எழுதிக்கொள்' என்பார். அவருடைய நாவில் அவருக்கு அவ்வளவு நம்பிக்கை. நாமகளின் கடாட்சம் பெற்றவரோ தெரியாது. வாய் திறந்தால் கவி மணக்கும்... அவர்தான் சோமலிங்கக் கவிஞன். கடவுளைப்பற்றியும் பாடுவார், மறுகணம் காதலைப்பற்றியும் பாடுவார். காவியுடையே சதமென்பார், பின்னால் கன்னியெழிலே நிசமென்பார். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம் அது என்னவெனில், கவிதைப்பொருள் எதுவாயினும் கச்சிதமாகச் சொல்லிவைப்பார். பார்வைக்குச் சுமாராகத்தோன்றும் இவரது கவிதைகளிலே இறைநம்பிக்கையும், தத்துவங்களும் நிரம்பிக் காணப்படும். ஆசிரியரான இவரது கவிதைகள் அநேகமாக ஒவ்வொரு வாரமும் சிந்தாமணி வார மலரில் இடம்பெற்றிருக்கும். அன்புக்குக் கட்டுப்படும் இவர் விபுலானந்தத்தின் ஆசிக்கு என்றும் உரியவர். இன்னும் பல்லாண்டு காலம் வாழ்ந்து தத்துவக் கவிதைகளையும், தமிழ்ப் பணிகளையும்செய்ய இறைவன் அருள் பாலிக்கட்டும்.

— தொகுப்பாசிரியர்.

*********

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

அயராது உழைத்த ஒரு பெரியவரை நினைவுகூருமுகமாக ஒரு விழா எடுப்பதுடன் நின்றுவிடாது, அந்த விழாவைவ என்றென்றும் நினைவூட்டும் வகையில் "விபுலானந்தம்" எனும் பெயரில் ஒரு கவிதைநூலும் வெளியிடத் துணிந்துள்ள விழாக்குழுவினரின் முயற்சியைப் பாராட்டாது இருக்கமுடியாது.

மேலும், அடிகளாரின் முயற்சியினால் உருவாகிய கல்விக்கூடங்களில் ஒன்றாகிய இந்த வித்தியாலயம் அவரது நினைவு தினத்தை முன்னிட்டு இத்தகைய கைங்கர்யங்களைச் செய்வது அடிகளாரின் சேவைகளுக்கு நன்றி கூறுவதாக அமையுமென்பது எமது திட நம்பிக்கை. துன்பம் வருங்கால் திசைமாறிச் செல்லும் மக்களை ஏற்ற வழியில் இட்டுச்செல்ல இதுபோன்ற விழாக்களும், இவ்விழாக்களில் கூறப்படும்
(தொடர்ச்சி 20ஆம் பக்கம்)

# தொடருலைத்துதிக்கும்

கவிஞர். வெற்றிவேல். விநாயகமூர்த்தி

வாழ்கின்ற துறவிகளின் திறமை காண
வானுலகில் இருந்தொருவன் வந்த போது
ஆழ்கடல்சூழ் ஈழவள நாடு இதனில்
அழகோடு *இழிவோடும் அருமை ஆன
கீழ்க்கரையின் மட்டுநகர் தென்பால் தன்னில்
கேட்டோரும் பார்த்தோரும் வியக்கும் வண்ணம்
"யாழ்நூலை" யாத்தோனும் பிறந்தான் நன்று!
யாவருக்கும் புதுமையோ புதுமை! என்று.

முத்தமிழின் இசைக்கலையின் முனிவனாகி
மூவுலகும் மயக்கமுறும் யாழ் ஓசையை
இத்தரணி தனிலெடுத்துத் காட்டி யோதி
எழுத்தாலும் நூலாக்கி இயம்பொன்னதை
எத்தனையோ திறமைகளைத் தன்னுள் வைத்து
இளமையிலே துறவியாய் இருந்து கொண்டே
அத்தனையும் தமிழன்னைக் கான சேவை
ஆற்றியதை அறிந்தவனும் விந்தை யென்றான்!

கண்டறிந்த மனிதரிலே திறமை யுள்ளோர்
காண்பதுவே அரிதாக விருக்கும் போது
பண்டிதனாய்ப் பாவலனாய்ப் பன்மொழி வல்லோனாய்
பல்கலைக் கழகத்தில் பாராட்டும் ஆசானாய்
எண்டிசையும் புகழ்பரவ, எடுத்தசெயல் பெயர்நிலவ,
'ஈழக்கரி கால'னென இமயம்வரை சேவையினைக்
கொண்டோனாய்க் குணக்குன்றில் நின்றோனு மாகி
குறையேதுங் காணாது நிறைவாகக் கண்டான்.

அறம்வளர்க்கும் சமயத்தோர் ஆகாத செயலாய்
ஐம்புலனை அடக்காமல் ஆசைவழிச் சென்றே
மறம்வளர்க்கும் மறைவான துறவிகளும் கண்டான்
மற்றோர்க் குரைக்கமயில் வாகனனைக் கொண்டான்
புறமதிலும் அகமதிலும் போற்றுஞ் செயலாகிப்
புகழ்ராமக் கிருஷ்ண சங்கத்தை நாடித்
துறவான சுவாமி விபுலானந்தனையே
தொண்டனாய்க் கண்டும் தொடருலகு ஏதிக்கும்.

(*இழிவோடும்-இழிவுகள் ஓடும்)

*********

<u>கவிஞர். வெற்றிவேல். விநாயகமூர்த்தி அவர்கள்</u>

வெற்றிமகன், வேவி, வள்ளி என்னும் புனை பெயர்களில் தம்முடைய ஆக்கங்களை வெளிக்கொண்டு வந்துள்ள இக்கவிஞர் இளைப்பாறிய ஒரு தலைமை ஆசிரியர். கடந்த நாற்பது வருடங்களுக்கு மேலாக, கவிஞராகவும் வானொலிக் கலைஞராகவும் பொதுச் சேவையாளனுமாக வலம் வருகின்றார். அடிக்கடி இவரது நற்சிந்தனைகள் வானொலியில் ஒலிப்பதை யாவரும் அறிவர். மெல்லிசைப் பாடல்களில் இக்கவிஞரின் பாடல்கள் மிகப் பிரசித்தி பெற்றவை. முல்லைச் சகோதரிகள் பாடிய "அச்சம் நாணம் மடம் பயிர்ப்பு, அத்தனையும் உன் சிறப்பு" என்னும் பாடல் இன்னும் என் காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கின்றன. "பாலர் பாமாலை" என்னும் பாப்பாக்களுக்கான நூலை 1972ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளார். மிக உணர்ச்சிகரமாக மேடைகளில் உரையாற்றக்கூடிய இவர் இன்றும் தன்னுடைய பங்களிப்புக்களைச் செய்து கொண்டிருக்கின்றார். மேலும், அவருடைய பணி சிறக்க எமது வாழ்த்துக்கள்.

— தொகுப்பாசிரியர்.

*******

(18ஆம் பக்கத் தொடர்ச்சி)

கருத்துக்களும் இன்றியமையாதன. அடிகளாரின் நினைவு தினமும் இத்தகைய நல்ல சந்தர்ப்பங்களில் ஒன்றாக வாய்க்கப்பெற்றுள்ளமை குறித்துப் பெருமிதமுறுகின்றோம்.

விழாக்குழுவினரின் முயற்சியும், கவிதைநூல் வெளியீடும், இவை தொடர்பான கொண்டாட்டங்களும், நற்கருத்துக்களும் என்றென்றும் மக்களின் மனதைவிட்டு நீங்காமல் நிலைபெறப் பகவான் ஸ்ரீராமகிருஷ்ண தேவரை மனதாரப் பிரார்த்தித்து எனது நல்லாசிகளையும் கூறி நிற்கின்றேன்.

— சுவாமி ஜீவனானந்த

06.07.1987
ராமகிருஷ்ண மிசன்,
ராமகிருஷ்ணபுரம்,
கல்லடி.

# சொல்லவும் முடியுமோ?

சாருமதி

சங்க யுகச் சான்றோர் ஆண்டிய
எங்கள் தமிழ்க் கலையின் விளக்கு
மங்கி மடிந்து மாளாமல் இம்மண்ணிலே
மாட்சிமை கொண்டு மணிமுடி தரித்து
தங்கி யிருக்கத் தமிழ் செய்த
தனிப் பெரும் சிகரம் தமிழ்க்கடல்
திங்களை யொத்த தீரன் விபுலானந்தனின்
சங்கதிகளை நினைக்கச் சதிரம் சிலிர்க்கும்.

தொண்டனுக்கும் தொண்டனிவன் தொடர் பணியாளன்
தமிழைத் தோண்டி யாழ்நூல் கண்டெடுத்தோன்
என்றிருக்க நான் இவன் புகழ்பாட
என்ன தகுதி கொண்டேன் என்றகேள்வி
என்நெஞ்சிடிக்க எலி இமயம் தோண்டினாற்போல்
இங்குசில வார்த்தைகளை என்னுள் நான்
கண்டெடுக்க முயல்கின்றேன் தமிழ்க் கவி
வந்தெனக்கு உதவட்டும் வாசிப்போர் ரசிக்கட்டும்.

சொல்லவும் முடியுமோ? சொல்லியும் அடங்குமோ?
துறவி ஆகியும் தமிழைத் துறவாத
நல்லரும் மருந்து நாம்கண்ட சஞ்சீவி
வல்லோன் விபுலானந்தன் வாழ்ந்த பெருமைகளை;
கல்வியிற் சாதனை கலைகளிற் சாதனை
கதியற்ற பிள்ளைகளின் காபந்தில் சாதனை
எல்லோரும் இங்கு இன்புற்றிருக்க வேண்டும்
என்பதே எங்கள் விபுலானந்தன் போதனை.

கிழக்கின் சூரியனிவன் கீழ்வானின் முதல்வெள்ளி
பிறர் நலத்தையன்றித் தனக் கென்றேதும்
உழைக்க நினையோன் உத்தம நெடுநெஞ்சன்
களைத்து அறியான் தமிழோடு பொதுப்பணி
தளத்தில் நின்று ,தாயாகி உழைத்தவன்; இவன்
விதைத்தவை இங்கு வீழ்வற்ற விருட்சம்
பலத்தினைக் கொடுப்போம் எங்கள் விபுலானந்தனின்
தமிழ்ப் பொதுப் பணிகளைக் காப்போம்.

********

<u>திரு. க. யோகநாதன் (சாருமதி) அவர்கள்</u>

"சாருமதி" என்னும் பெயரில் இலக்கியப்பணி புரிந்துவரும் நண்பர் யோகநாதன் முற்போக்கு எண்ணம் நிறைய உடையவர். சொற்செட்டுக்களும், பந்தாக்களையும் விரும்பாதவர். மிக எளிமையானவர். எருவில் அரசினர் பாடசாலையில் அதிபராக இருக்கும் இவர் மட்/விபுலானந்தா படிப்பகத்தில் பட்டப்படிப்பு மேற்கொண்டிருக்கும் மாணவர்களுக்கு விரிவுரைகள் செய்துவருகின்றார். தமிழிலே சிறப்புப் பட்டதாரியான இவர் மேலும் பல உயர்பதவிகளைப்பெற்று தான் உயர்வதோடு, தமிழுக்கும் தொண்டாற்றக் கடவுள் நல்லாயுளையும் உடல் உரத்தையும் நல்கவேண்டுமென விபுலானந்தம் வாழ்த்துகின்றது.

— தொகுப்பாசிரியர்.

*********

With the Golden Jubilee Celebrations still vivid in its memory, the school is determined to press forward in realizing the aspirations of its great founder, Swami Vipulananda. The publication of "Vipulanandam" is an appropriate tribute to the great teacher and founder of the school.

I wish this venture and all future endeavours of the school, success.

Mrs: G.R.Rasiah,
Deputy Principal.

# சுவாமி வாழ்க!

மட்டுநகர் முத்தழகு

வெள்ளைநிறப் பூக்களாலே தன்னுள்ள
வடிவத்தை வடித்தவரே! கிழக்குவானின்
கள்ளமில்லா வெண்மதியே! முத்தமிழின்
கோயிலான வித்தகரே! விபுலானந்தா!
பிள்ளைமனப் பக்குவமே! பெருமையில்லாப்
பேரறிவே! நான்வணங்கும் தாயாய்க்
கொள்ளப்படும் பேரின்பப் பக்குவமே!
குயில்கள்பாடிக் கோதுகின்ற மாந்தளிரே!

காரைமண்ணின் தவமே! நாகரெத்தினமே!
கண்ணகித்தாய் தந்த காவியமே!
வீரநகர் விளக்கேற்றும் 'மயில்வாகனமே'
விடிவானின் சமரசமே! கோழிகூவி
வரவேற்கும் செங்கதிராய்ச் சிரிக்கின்ற
வரலாற்றுச் சரித்திரமே! உங்களது
ஊர்கூறி எங்கள்தாய் தாலாட்டி
உறங்க வைக்கும் அற்புதமே!

அலைகடல் உவந்தளித்த ஆணிமுத்தே!
அன்னையாம் கண்ணம்மை வயிற்றில்
நிலையான தமிழோங்கப் பிறந்தயாழே!
நல்லோர்கள் நெஞ்சினிலே என்றென்றும்
கமலமாய்த் துலங்குகின்ற 'யாழ்நூலே'
காலத்தால் அழியாத தமிழ்த்தொண்டே!
தமிழ்ப்பணியின் தேயாத திருத்தலமே!
தமிழ்நாட்டில் தலைநிமிர்ந்த முத்தமிழே!

பாடும்மீன் நாடென்றே இசைநூலால்
பாரெல்லாம் புகழ்மணம் பரப்பவைத்த
ஏடெல்லாம் போற்றிடும் வித்தகரே!
ஏழிசை வீணையே விபுலானந்தா!
கதிர்சிரிக்கும் கிழக்கினிலே! குடைநிழலில்
கல்வியின் கண்களாய்ச் சுடர்கின்ற
போதனைநூலே பிறந்த நாட்டின்
பெருமைக்குரியவரே! "சுவாமி வாழ்க"

*********

<u>மட்டுநகர் முத்தழகு அவர்கள்</u>

மட்டுநகர் முத்தழகு என்பவரை முத்தழகுக் கவிஞன் என்பதா? அல்லது கனல்தெறிக்கப் பேசும் பேச்சாளன் என்பதா? அல்லது சமுதாய முன்னேற்றத்துக்காக, சமூகங்களின் ஒற்றுமைக்காகப் பாடுபடும் தொண்டன் என்பதா? அல்லது புதியதொரு சகாப்தத்துக்காகப் பயன்மிகு கருத்துக்களைக் கொண்டிருக்கும் தத்துவஞானி என்பதா? அவரை எந்தப் பட்டியலில் அடக்குவது என்று எமக்குக் கருத்தெதுவும் விளங்கவில்லை. ஆனால் ஒன்றுமட்டும் நிச்சயம், அது என்னவெனில், சமுதாயத்தின் எந்தத் துறையிலிருந்தும் அவரைப் பிரிக்கமுடியாது. அவர் ஒரு சகலகலா வல்லவன். மட்டக்களப்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினரான இவர், தனது ஆக்கங்களைப் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் நிறையக் கொண்டுவந்திருக்கின்றார்.... அவரது பணி மென்மேலும் இங்கு தொடர எமது வாழ்த்துக்கள்.

— தொகுப்பாசிரியர்.

********

அன்புடையவர்களே,

சஞ்சிகையொன்றை வெளியிட இக்காலத்தில் நினைப்பது தவறு. நினைத்துவிட்டாலும் தொடர்ந்து அம்முயற்சியில் ஈடுபடுவது தவறு. ஈடுபட்டுவிட்டாலும் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் ஆக்கங்களைச் சேகரித்து, அவற்றைத் தொகுத்தெடுப்பது மிகத் தவறு. தொகுத்தெடுத்துவிட்டாலும் அதனை அச்சிட்டுக் கட்டி எடுப்பது தவறு.....இத்தனை தவறுகளும் நேர்ந்துவிட்டபிறகு, இதனை வெளியிடாமல் இருப்பது மகா தவறு. ஆகவே, இதனை உங்கள் கரங்களில் தருகின்றோம். மஞ்சரியின் மணம் எப்படி இருக்கின்றது என்பதைக் கூறுங்கள். நன்றி.

வி. தங்கத்துரை (தொகுத்தவன்)

(குறிப்பு:— தவறு?... ஏற்படும் செலவை நினைத்துத்தான்)

# ஈழ மாது மகிழவே!

திமிலை மகாலிங்கம்

காரைதீவு புண்ணியந்தில் கடவுள்தந்த உத்தமன்
கல்விஞானம் கடல்கடந்து கற்றுவந்த வித்தகன்
வீரமிக்க சீலர்தம்மை வித்தகச் சிறப்பிலே
மேன்மையோங்க ஈழமீதில் விளங்கவைத்த சத்தியன்.

அந்தகத்தில் மதிமயங்கி அடைந்திருந்த மக்களை
அறிவுஜோதி ஏற்றிவைத்து அரவணைத்த தலைமகன்
சொந்தகத்தில் பாடசாலை தோற்றுவித்து வறியரும்
தொடருகல்வி காணவைத்த தூயவள்ளல் வித்தகன்.

கடல்கடந்து ஈழமாது கண்குளிர்ந்து மகிழவே
கல்விகேள்வி பாரதத்தில் கற்றுச் சேவையாற்றவே
இடமளித்த ராமகிருஷ்ண இயக்கமீது ஆர்வமாய்
இங்குவந்து தங்கிச்சேவை இனிதுசெய்த உத்தமன்.

நீரில்ஓசை மீட்டுகின்ற நேர்த்திகண்டு நாதமே
நிறைவையீனு மென்பதற்கு நீண்டகால ஆய்வதில்
பாரிலெங்கள் தமிழில்யாரும் பாடிடாத வகையிலே
பணியில்மேருவாக யாழ்நூல் பாடிவைத்த தலைமகன்.

எதிரியாரு மில்லைகல்வி என்றவாளை ஏந்தினால்
எங்கள்வெற்றி கல்வியீனும் என்றசொல் சிறக்கவே
மூதுரைசென்று முதல்வனென்று மக்களால் வியக்கவே
வல்லபண்டிதப் பதவி மாட்சிபெற்ற தலைமகன்.

அன்பிருட்சி மானிலத்து ஆசைபேதம் அற்றதாம்
அரிய கல்வி சேவைமூலம் அளவிலாது இ ணைர்கள்
உரியஞான மெய்ததற்கு ஊக்கமூட்டித் திறமைகள்
தெரியவைத்து மிளிரவைத்த செம்மலான தலைமகன்.

முறிவிலான பேதம் யாவும் முடிச்சேவை மூலமாய்
செறிவுதந்த சீலனெங்கள் தெய்வமான வித்தகன்
அறிஞனாகி அமரனாகி ஆவியாகி அகலினும் - இங்கு
நிறைவதாகி எங்கள்நெஞ்சில் நீடுநின்று வாழ்வனே.

*********

கவிஞர். திமிலை. மகாலிங்கம் அவர்கள்

"ஈழமாது மகிழ எங்கள்நெஞ்சில் நீடுநின்று வாழ்வன்" என்று அடிகளின் நினைவு மீட்டும் இக்கவிஞர், திரு. எஸ். மகாலிங்கம் அவர்கள் ஒரு கிராம சேவை உத்தியோகத்தர். எளிமையாகத் தோற்றமளிக்கும் இவரது பரம்பரைக்கு நீண்டகால வரலாறு இருக்கிறது. இவர் கலைக்குடும்பத்தைச் சேர்ந்தவர். திமிலைத்துமிலன், திமிலைக்கண்ணன் வரிசையில் இவரும் ஒருவர். கவிதை எழுதுவதோடு மாத்திரம் நின்றுவிடாது பத்திரிகைகளில் கதைகள், கட்டுரைகளென்று எவ்வளவோ எழுதி வருகின்றார். சிறுவர், சிறுமியரைக்கொண்டு சரித்திர நாடகங்கள் பலவற்றை மேடையேற்றி வெற்றி கண்டிருக்கின்றார். அவர்பணி மேலும் சிறக்க எமது பாராட்டுக்கள்.

- தொகுப்பாசிரியர்.

*********

பழைய மாணவர் சங்கச் செயலாளர் பேசுகிறார்.....

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

என்றார் வள்ளுவர். நாம் செய்நன்றி கொன்றவர்களாக இராது வாழ்ந்து மறைவதற்கு இவ்வாறான முயற்சிகள் நிச்சயம் தேவை. ஏனெனில், வழிகாட்டிச் சென்றவர்போல், பிறருக்கு எம்மால் வழிகாட்ட முடியாவிடினும் அவரை நினைவுகூர்வதன் வாயிலாகவேனும் பிறருக்கு வழிகாட்ட முடியுமாயின், இறந்தும் வாழுகின்ற விபுலானந்தத் துறவியின் நன்றியறிதலுக்கு உள்ளாவோம்.

ஆனைப்பந்தி மகளிர் வித்தியாலயம் எழுச்சி கொண்டுள்ளதை அண்மைக்காலமாக நாம் அவதானித்து வருகின்றோம். மென்மேலும் அதன் முயற்சிகள் வளர எமது வாழ்த்துக்கள்.

செல்வி. மலர்விழி ஐயாத்துரை

# முத்தமிழ் முனிவா!

கவிஞர். எருவில்மூர்த்தி

முத்தமிழ் முனிவா! ஈழம்
முகிழ்த்தநற் சுடரே! ஞாலம்
சத்திய வழியே வாழச்
சகலமும் துறந்தே ஞானச்
சித்தனாய்த் திகழ்ந்தே வேதம்
செழிப்புறச் செய்த சீலா!
வித்தகா! விபுலானந்தா!
விண்ணவா! பணிந்தோம், ஐயா!

செந்தமிழ்க் கடலுள் மூழ்கிச்
செழுங்கவி முத்தம் சேர்த்துத்
தந்தனை 'யாழ்நூல்' யாத்து
தமிழ்ப் பெரும் புலவா! நின்னை
நந்தமிழ்க் குலத்தோர் வாழும்
நற்பதி காரை தீவு
தந்ததோர் 'இளங்கோ' என்றே
தலைநிமிர்ந் துரைப்போம், ஐயா!

பூரணை மதியஞ் சிந்தும்
பொன்னொளி குளித்தே மின்னும்
கார்வளம் செறியும் மட்டுக்
களப்புடை வாவி வாழும்
நீரர மகளிர் பாட்டில்
நின்குரல் கேட்போர், நாட்டின்
பேரருட் புதல்வா! உன்றன்
பெருமையை உணர்வோர், ஐயா!

காவியை அணிந்தாய்; ஆனால்
கவிசெய மறந்தாய் இல்லை!
சாவினை அடைந்தாய்; ஆனால்
தமிழுடன் இந்த மார்க்கம்
மேவிடும் அகத்தே எல்லாம்
மிளிர்கிறாய்! புவிமேல் வாழ்ந்த
தேவனாய் ஆனாய்! உன்றன்
திருப்பதம் மறவோம்; ஐயா!

"வெள்ளை மா மலரோ; இல்லை
வேறு எப் பூவோ அல்ல
வெள்ளிமா மலைவாழ் ஈசன்
விரும்புதல் இதயம் என்ற
நல்ல மா மலரே!" என்று
நவின்றனை, அதனால், எங்கள்
உள்ளமா மலர்கள் தந்தே
உன்னையும் துதிப்போம்; ஐயா!

**********

கவிஞர். எருவில் மூர்த்தி அவர்கள்

இலங்கை வானொலியில் இன்னும் மெல்லிசைப்பாடல் நிகழ்ச்சியில் குறிப்பிட்ட ஒரு கவிஞரின் பாடல்கள் ஒலிபரப்பப்படுகின்றன. அவர் கிழக்கிலங்கையின் மட்டுநகரைச் சேர்ந்த கவிஞர் எருவில்மூர்த்தியேதான். தத்துவ முத்துக்கள் விரவிக் காணப்படும் இவருடைய பாடல்கள் இறைநோக்கை மையமாகக்கொண்டு பின்னப்பட்டவையாகக் காணப்படுகின்றன.

எதிர்பாராத விபத்தொன்றிலே ஊனக்கண்களை இழந்துவிட்ட கவிஞர்கள் ஞானக்கண்ணை இழக்காமல் நாட்டுக்கேற்ற நல்ல கவிதைகளை இயற்றிச் சேவையாற்றி வருகின்றார். அநேக கவியரங்குகளில் பங்குபற்றிச் சாதனை புரிந்திருக்கின்றார். மட்டக்களப்பிலே நடைபெற்ற பிராந்தியத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டிலே கவியரங்கிலே பங்குபற்றிப் புதுமை செய்தார். அமைதி, அடக்கம் ஆகியவற்றைப் பிறவியிலே தன்னிடத்துக்கொண்ட இவர் பற்றி எண்ணும்போதெல்லாம் 'தியாகராஜ பாகவதர்' பாடிய "ஞானக்கண்" என்னும் பாடலே எனக்கு நினைவுவரும்... இன்னும் பல்லாண்டு வாழ்ந்து வளம்பல பெருக வாழ்த்துகிறோம்.

# அழியாச் செல்வம்

இந்திராணி புஷ்பராஜா

வெள்ளை மலரென விரிந்த உளமதில்
விண்ணுறை வேந்தைக் கண்டு
கள்ளமறு சிந்தையால் கவிதைகளாயிரம்
காவியம் போற்ற யாத்த
தெள்ளிய உரைநடை தேர்ந்தநல் ஞானம்
திகழ்ந் திடு தீரனைக்
கொள்ளைபுகழ் நிறைவள்ளல் என வரையறை
கொண்ட முனி விபுலானந்தரும்.

கற்கக் கசடறக் கற்றதன் வழியினில்
நிற்க வகைசெய்யும் கல்வி
பெற்றிட மாணவர் பெருங்கலைக் கூடங்கள்
ஆக்கிய ஆற்றல் மிக்கோன்
அற்புதமாய்த் தமிழ், உரைநடை பயிற்றிய
சொற்றிறம் மிக்க வாசான்
கற்றவர் நாடிடும் கற்பகதருவவர்
காலத்தால் அழியாச் செல்வம்.

மூன்று தமிழுக்கும் நூல்தந்த யாழ்நங்கை
முறுவலால் மகிழ்வடைந் தோன்
சான்றோர், அவைதனில் சார்ந்திருந் தேயருஞ்
சாதனை செய்த வீரன்
தோன்றிப் புகழொடு தொண்டுகள் செய்தே
துறவினிற் தூய்மை பெற்றோன்
ஈன்றவள் உவந்திடும் ஈடிணை யற்றவன்
இமயம்போ லுயர்ந்த நெறியாளன்.

சைவமும் தமிழும் சாகாது உயிர்பெற
சாலைகள் அமைத்த மைந்தன்
வையகமெங்கணும் [illegible] மணம் வீசி
வரலாற்றில் பெயர் பொறித்தோன்
உய்யும் வழியென மெய்யியல் காட்டிய
மேன்மைகள் பெற்ற பெரியோன்
ஐயன் அவன்வழி தொடர்வோம். . . நாமும்
அகிலத்தில் நிறை வடைவோம்.

********

## திருமதி. இந்திராணி புஷ்பராஜா அவர்கள்

புன்னகை சிந்தும் முகம், சாந்தமான பார்வை, சிந்தனையைத் தூண்டும் வார்த்தைகள், கூர்ந்த நோக்கும் இயல்பு-இத்தனையும் இந்திராணியின் இயல்புகள். அவர் ஓர் அறிவுப் பெட்டகமாய் இருக்கின்றார். இளம் ஆசிரியையான இவர் மாணவர் மத்தியில் மிகுந் செல்வாக்குப் பெற்றவர். விஞ்ஞான ஆசிரிய ஆலோசகராகவும் கடமையாற்றுகின்றார்.

இவரது கவிதைகளிலே சமுதாயத்தின் இழிவுகண்டு கொதித்தெழுகின்ற தன்மையினையும், அவற்றை மிக இலாவகமாக நக்கல்செய்கின்ற பாங்கினையும் பல கவியரங்குகளிலே கண்டிருக்கின்றேன். ஓயாதவேலைப்பளு இவரை இத்துறையில் ஒதுங்கி நிற்கச் செய்தாலும், இடையிடையே இவ்வாறு வெளிப்படுவார். . வாழ்க. . வளர்க.

— தொகுப்பாசிரியர்.

*********

## நல்லாசிகள்

ஆனைப்பந்தி, இராம கிருஷ்ண மிசன் பெண்கள் கல்லூரி வருடந்தோறும், ஆடி மாதத்திலே "ஸ்தாபகர் தினம்" என்னும் பெயரில் சுவாமி விபுலானந்தருக்கு விழா எடுத்து வருகிறது. வழக்கம்போல இம்முறையும் "விபுலானந்தம்" என்னும் சஞ்சிகையை மிகச் சிறப்பான முறையில் வெளியிட விழாக்குழுவினர் தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றனர். அவர்களுடைய நன்முயற்சிகளுக்கு எனது மனங்கனிந்த பாராட்டுக்கள்.

பாடசாலைகளில் கல்வித்திட்டத்தோடு ஒட்டியவாறு நடாத்தப்படும் இத்தகைய விழாக்கள், அதாவது பாடப்புறக்கிருத்தியங்கள் மாணவரை நல்வழிப்படுத்தும் என்பது எனது எண்ணம். விபுலானந்தம் சிறக்க எனது மனங்கனிந்த நல்லாசிகள்.

கோட்டக் கல்வி அலுவலகம்,
மட்டக்களப்பு,
13.07.87

எஸ். எஸ். மனோகரன்
கோட்டக் கல்வி அதிகாரி

# அகிலத்தின் விளக்கு

எஸ். பத்மநாதன்

மட்டுமா நகரின் தொன்மை
மதிப்புற வைத்த இன்பம்
சொட்டிடும் தமிழ்க் கலைகள்
சிறப்புற வளரச் செய்து
பட்டிகள் தொட்டி யெல்லாம்
பள்ளிகள் சமைத்த எங்கள்
கட்டெழில் விபுலா நந்தர்
கழலடி போற்று வோமே.

சென்றநூற் றண்டு தன்னில்
சிறந்ததொண் ணூற்றி ரெண்டில்
ஒன்றம்பங் குனித் திங்கள்
ஒளிரும்நல் லிருபத் தாறில்
என்றுமெம் மனதில் நீங்கா
இடத்தினைப் பிடித்த ஞானி
தென்றலில் இனிய காரை
தீவினில் பிறந்தார் அம்மா!

திங்களாய் வளர்ந்த எங்கள்
தீந்தமிழ் விபுலா நந்தர்
சங்கத்தின் தமிழைக் கற்றும்
வடமொழி அறிவைப் பெற்றும்
இங்கிதம் தோய்ந்த நல்ல
"இங்கிலீசு" மொழியைக் கற்றும்
எங்ஙனம் வாழ்ந்தாரென்றால்
எளிமையின் இடமாய் வாழ்ந்தார்.

பதினாறும் பருவம் சென்ற
போதிலே அடிக ளார்கள்
(வளரும்)

முதியோரும் வியக்கும் வண்ணம்
    முதன்மையாய்க் கேம்பிறிச்சின்
அதிபெரும் பரீட்சை தன்னில்
    அறிவொளிர் சித்தி யெய்தி
மதியினுல் எமது நாட்டின்
    மதிப்பினை வளர்த்து நின்ருர்.

ஆண்டுகள் பலவா யெங்கள்
    அடிகளார் துணிந்து செய்த
தூண்டுதல் முயற்சி யாலே
    சொல்லரும் யாழ்நூல் தன்னை
தோண்டிடச் சுரக்கும் பண்ணின்
    சுரங்கமாய் எமக்குத் தந்தார்
ஆண்டுகள் சென்ற போதும்
    அவர்பணி மறந்தா போகும்.

அடிகளார் எம்மை விட்டு
    அகிலத்தில் மறைந் திட்டாலும்
முடிவிலா தவர் புகழும்
    முத்தமிழ் விளக்கி நின்று
கடிமணம் பரப்பு கின்ற
    கவிதை கட்டுரை தாமும்
கொடிமர விளக்காய் நின்று
    குவலய இருள் அகற்றும்.

*******

<u>திரு. எஸ். புத்ரநாதன் அவர்கள்</u>

மட்டக்களப்பு, இ.போ.ச. சாலையில் கணக்குப் பகுதியில் எழுத்தராகக் கடமையாற்றும் இவர் இலக்கண ரீதியில் கவிபுனையும் ஆற்றல் மிக்கவர். இவருடைய எத்தனையோ கவிதைகளைப்பற்றிய எனது மதிப்பீடு இது. கோட்டைமுனை மகா வித்தியாலயத்தின் பழைய மாணவரான இவர் பழகுவதற்கு மிகவும் இனியவர். அரங்கு பலகண்ட அருங்கவிஞர். அத்தனையிலும் அருங்கவிதைகளை யாத்தளித்திருக்கின்ருர். அவர்பணி கவியரங்குகளுடன் மாத்திரம் நின்றுவிடாமல் சகல துறைகளுக்கும் வியாபிக்கவேண்டுமென்று விபுலானந்தம் அவரை வாழ்த்துகின்றது.

— தொகுப்பாசிரியர்.

playing on the sand, having a dip in the sea, and in the ' theertha pond'- தீர்த்தக் குளம் (THEERTHTHAK KULAM) all these were performed in the best of conviviality and spirits. what else do you need to build up a healthy body and a healthy mind? whatever was left out Vipulananda incorporated in his system. Thus the Master designed his system of education.

K.Kanapathipillai.
B.A. (DIST.), F.R.C.S.

******************

('இச்சஞ்சிகை சம்பந்தமான எழுத்துவேலைகளில் உதவிய மட்/இலங்கை வங்கி, திரு. எஸ்.பங்கிராஸ் அவர்களுக்கு நாம் என்றும் கடமைப்பட்டுள்ளோம்)

**நன்றி நவில்கின்றோம்**

ஞாபகர் தின விழாவை மனமுவந்து
சிறப்பிக்க வந்த பிரதம, சிறப்பு
விருந்தினர்க்கும்,
பெற்றோர், பழைய மாணவர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்,
மற்றுமுள்ள நலன்விரும்பிகளுக்கும்,
விழாவும் 'விபுலானந்தமும்'
சிறக்க உழைத்த எம்
ஆசிரியர் குழுவுக்கும்,
ஊக்கமுடையவர்களை மேலும்,
ஊக்கப்படுத்திய எம் அருமை
அதிபருக்கும்,
மற்றும், கவிஞர் பெருமக்களுக்கும்,
இவ்விடயத்தில் ஒத்துழைப்பு நல்கிய
எம் மாணவத் தோழிகளுக்கும்,
மற்றுமுள்ள சகலருக்கும்......
நன்றி...நன்றி...நன்றி.....

— செயற்குழு
தமிழ் இலக்கிய மன்றம்.